தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch
trfswiss@gmail.com

**7 வயதுப்பிரிவு**
(01.01.2011 – 31.12.2011 வரையில் பிறந்தோர்)

# தமிழர் கலைகள்

தமிழரெம் வாழ்வில் கலைகள் தனித்துவம் மிக்கவை. இவை பிறப்பு முதல் இறப்பு வரை எம் வாழ்வோடு இரண்டறக் கலந்தவை. எம்மைச் சீராக நெறிப்படுத்தி நல்ல மனிதர்களாக வாழ வழிசெய்பவை.

தமிழர், கலைகளை அழகியற்கலைகள், நுட்பக்கலைகள், வீரக்கலைகள், தொழிற்கலைகள் என பல்வேறு வகையாக வளர்த்தெடுத்தனர்.

இயல், இசை, நாடகத்துடன் ஓவியம், சிற்பம் போன்றனவும் கிராமியக் கலைகளான கும்மி, கோலாட்டம், கரகாட்டம், காவடியாட்டம், புலியாட்டம், பொய்க்காற்குதிரை, தெருக்கூத்து, வில்லுப்பாட்டு போன்றனவும் அழகியற் கலைகளாம். தமிழீழ விடுதலையை மக்களிடையே கொண்டு செல்வதற்கு இத்தகைய அழகியற் கலைகள் பெரிதும் துணை நின்றன.

தமிழரின் வீரக்கலைகளான வாட்போர், மற்போர், சிலம்பம், களரி, கத்தரி, மடுவு போன்றன சிறப்பு மிக்க தற்காப்புக் கலைகளாக மிளிர்கின்றன. அதன் பண்புகளைப் பின்பற்றி, உலகமே வியந்து பார்க்கும் தனித்துவமான போர்க்கலைகளை வடிவமைத்தார் எங்கள் தலைவர் மாமா.

தமிழர் வரலாற்றை வாழவைக்கும் பலமும், இன்றைய வலி சுமந்த வாழ்வை மாற்றியமைக்கும் வலுவும் தமிழ்க் கலைகளுக்கு உண்டு. தமிழ்க் கலைகளை விரும்பி வளர்த்த எங்கள் தலைவர் மாமா, தாயகம் கடந்தும் அவற்றை நிலைபெறச் செய்தார்.

தலைவர் மாமாவின் வழிகாட்டலோடு, இன்று தமிழர் வாழ்கின்ற நாடெல்லாம் தமிழ்க்கலைகள் பேணப்பெற்று வருகின்றமையை மகிழ்ந்து பாராட்டுவோம். புகழ் மிக்க எமது கலைகளை நாமும் போற்றி வளர்ப்போம்.

நன்றி,

வணக்கம்.